# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.ஜி.ஜெயராமன்.பி.காம்.,**

ந.க.எண். 177/2017/தி1

நாள்: 10.10.2017.

பொருள் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு - முறைப்படுத்துதல் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் - செட்டிகுளம் ஊராட்சி - மதுரை உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி - செட்டிகுளம் ஊராட்சி / கிராமம் ரீசர்வே எண். 33/4, 34/9 மற்றும் 34/10-ல் 8700 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் வரன்முறைப்படுத்தி கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை

1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம் - III, பிரிவு 1(A), நாள் : 04.05.2017.

2. உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம் 3-ம் தளம், அண்ணா மாளிகை, மதுரை - 2 கடித ந.க.எண். 1653/2017/ம.தி.2 நாள் : 12.09.2017.

3. மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் மாநகராட்சி அலுவலக அண்ணா மாளிகை ந.க.எண். 1739/2017/மதி.2/நாள் : 03.10.2017

*****

உத்தரவு:

பார்வை 2-ல் காணும் கடிதத்தில், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி செட்டிகுளம் கிராமம், ரீசர்வே எண். 33/4, 34/9 மற்றும் 34/10-ல் 8700 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1-ல் சுட்டிய அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு பார்வை 3-ல் கண்ட மதுரை மாநகராட்சி உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் (in Principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.கு.எண்.17/2017 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கான திறவெளி ஒதுக்கீடு (OSR) பரப்பு 5 ¾ செண்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனை சம்மந்தப்பட்ட ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.
2. முறைப்படுத்துதல் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேலும், வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.100/-வீதம் "Special Officer" - தனி அலுவலர் செட்டிகுளம் ஊராட்சி தனிக்கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

**நிபந்தனைகள் :**

1. மனைப்பிரிவின் சாலைகள் அனைத்தும் கொள்கையளவிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேலும், பொதுப்பாதையிலிருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் மனையிடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப் பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ளும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலைகளையும் OSR ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப் பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய்த் துறை ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
3. தனித்த மனை வரன்முறைக்கு அபிவிருத்திக் கட்டணம், OSR கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் ஆகியவற்றினை 30 நாட்கள் கால அவகாசமிட்டு மனுதாரரிடம் உள்ளாட்சியால் கேட்பு செய்யப்படும். 30 நாட்களில் செலுத்தப்படாத நிலுவைத் தொகைக்கு 6 % வட்டி வசூலிக்கப்படும். கேட்பு செய்து 90 நாட்களுக்குள் செலுத்தாத போது மனைக்கு வரன்முறை செய்வதற்கு அனுமதி மறுக்கப்படும்.
4. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிட வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.
5. உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யப்படாது.

6. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (in Priciple) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ண்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு A-09/1& A-10, A-14, B-01, B-03, B-05, B-06, C-01, C-03, D-01, D-03, D-04, E-01, E-02, E-03, E-04, E-05, F-01,F-02, F-03, F-04, G-03, G-05, H-02, I-01, I-05, I-06, I-07, I-09, I-10, J-06, J-07 ல் உள்ள பிளாட் எண்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்,(கிஊ),
செட்டிகுளம் ஊராட்சி .

10/10/17

பெறுநர்

திரு.பி.ஜெயகுமார்.
த/பெ.பால்ராஜ்.
அவனியாபுரம்.
மதுரை.

நகல் :

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
மதுரை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.ப.வேல்முருகன், பி.இ.,<br>உறுப்பினர் செயலர் (பொ),<br>மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்,<br>மாநகராட்சி அலுவலக வளாகம்,<br>3-ம் தளம், அண்ணாமாளிகை,<br>மதுரை - 2.<br>E.mail –ID : mlpa_ctcp@yahoo.in<br>www.tn.gov.in/dtcp | திரு.P.ஜெயகுமார்,<br>C-5, ஜெயபாரத் வீடுகள் IV,<br>அவனியாபுரம்,<br>அருப்புகோட்டை மெயின் ரோடு,<br>மதுரை-12 |
| ந.க.எண்.1739/2017/மதி.2 | நாள் : 04.10.2017 |

ஐயா,

பொருள் : அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு - முறைப்படுத்துதல் மதுரை உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி - வடக்கு தாலுகா மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி / கிராமம் - ரீசர்வே எண்.33/4, 34/9 மற்றும் 34/10-ல், 8700 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் வரன்முறைப்படுத்தி கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை : 1) மனுதாரர் திரு.P.ஜெயகுமார் என்பவரின் விண்ணப்பம், நாள் 21.08.2017

2) உள்ளூர் திட்டக்குழும வரன்முறைப்படுத்தல் மனைப்பிரிவு ம.வ.(வ)/ம.உ.தி.கு எண்.17/2017, நாள் 03.10.2017

--------------

மேற்காண் பொருள் தொடர்பாக, வரன்முறைப்படுத்தல் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவு மற்றும் வரைபடங்கள் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், மேற்கு ஊராட்சி ஒன்றியம், மதுரை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்துடன் உள்ளாட்சியை அணுகி தனித்த மனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ),
மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.ப.வேல்முருகன், பி.இ.,<br>உறுப்பினர் செயலர் (பொ),<br>மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்,<br>மாநகராட்சி அலுவலக வளாகம்,<br>3-ம் தளம், அண்ணா மாளிகை,<br>மதுரை -2.<br>E.mail –ID : mlpa_ctcp@yahoo.in<br>www.tn.gov.in/dtcp | வட்டார வளர்ச்சி அலுவலர் /<br>தனி அலுவலர்,<br>மேற்கு ஊராட்சி ஒன்றியம்<br>மதுரை. |
| ந.க.எண்.1739/2017/மதி,2 | நாள் : 03.10.2017 |

ஐயா,

பொருள் : அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு - முறைப்படுத்துதல் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி - வடக்கு தாலுகா மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி / கிராமம் - ரீசர்வே எண்.33/4, 34/9 மற்றும் 34/10-ல், 8700 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் வரன்முறைப்படுத்தி கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை :
1) மனுதாரர் திரு.P.ஜெயகுமார் என்பவரின் விண்ணப்பம், நாள் 21.08.2017
2) மனுதாரர் திரு.P.ஜெயகுமார், என்பவரின் Online Registration விண்ணப்பம் எண்.DTCP/L/0005693/2017, நாள் 16.08.2017
3) அரசாணை எண் 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம்-III, பிரிவு 1(a), நாள் 04.05.2017.

---------

மதுரை உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி - வடக்கு தாலுகா - மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி / கிராமம் - ரீசர்வே எண்.33/4, 34/9 மற்றும் 34/10-ல், 8700 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 3-ல் சுட்டிய அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு (in principally accepted layout frame) ம.வ.(வ)/ம.உ.தி.கு எண்.17/2017 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. பார்வை 2-ல் கண்ட மனுதாரர் கடிதத்தில் மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத 30 மனைகளுக்கு உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு Online மூலம் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

2. பொது திறவிட பரப்பானது, மனைப்பிரிவின் மொத்த பரப்பளவில் 10% ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தால், விற்பனை செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத தனித்த மனைகளுக்கு ஒப்புதல் வழங்கும் போது மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கீழ்க்கண்டவாறு OSR கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மனைக்கும் OSR கட்டணம் $= \text{Plot area} \times \frac{\text{OSR Area}}{\text{Total Plot Area}} \times \text{Guideline value}$

<u>வழிகாட்டி மதிப்பீடு</u> :

31.03.2012 வரை பதிவு செய்யப்பட்ட மனைகளுக்கு 1.8.2007-ன்படி பதிவுத்துறையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டி மதிப்பீடு வசூலிக்கப்பட வேண்டும். 01.04.2012-ற்கு பின்னர் பத்திர பதிவு செய்யப்பட்ட மனைகளுக்கு இவ்விவரங்களை அரசிதழில் வெளியிடப்பட்ட 04.05.2017 அன்று பதிவுத் துறையால் குறிப்பிடப்பட்ட வழிகாட்டு மதிப்பீட்டின்படி வசூலிக்கப்பட வேண்டும். மேலும், மனைப்பிரிவில் விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு இத்துறையால் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்படும் நாளைய வழிகாட்டும் மதிப்பினை வசூலிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட OSR கட்டணம் கீழ்க்கண்ட அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

3. முறைப்படுத்துதல் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேலும், வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.100/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே, இம்மனைப்பிரிவில் அமையும் தனித்த மனைகளுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

**<u>Head of Account:</u>**

0217 - Urban Development
60 - Other Urban Development scheme
800 - Other Receipts
AT - Receipts under Regularisation Charges of unapproved layouts and plots - DTCP
(DPC : 0217 – 60 – 800 – AT 0007)

நிபந்தனைகள் :

(i) மனைப்பிரிவின் சாலைகள் அனைத்தும் கொள்கையளவிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின்படி தானாக முன்வந்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். மேலும், பொதுப்பாதையிலிருந்து (Public Road) மனுதாரர்

மனைப்பிரிவு அமையும் மனையிடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப் பகுதியை, உள்ளாட்சி தானாக முன்வந்து தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டு, அதன் விவரத்தினை தெரிவிக்க வேண்டும்.

(ii) இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும். மனையில் அமையும் கட்டிட வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.

(iii) மதுரை உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக் கூடாது.

(iv) நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

(v) மனைப்பிரிவில் தனித்த மனைக்கு வரன்முறை அனுமதி வழங்கிய உத்தரவினை வரைபடத்துடனும் கட்டணங்கள் செலுத்தப்பட்ட விவரத்துடனும் இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

(vi) மனுதாரரின் வாயிலாக கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் பிரஸ்தாப மனைப்பிரிவின் மனைகள் 2/3rd-க்கு கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் கருதி கொள்கையளவிலான ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(vii) கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பரப்பளவு இருப்பின் அதற்கேற்றால் போல் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

(viii) மனைப்பிரிவு வரைபடத்தின் சாலைகளை மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தான பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய்த் துறை ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ix) தனித்த மனை வரன்முறைக்கு அபிவிருத்திக் கட்டணம், OSR கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் ஆகியவற்றினை 30 நாட்கள் கால அவகாசமிட்டு மனுதாரரிடம் உள்ளாட்சியால் கேட்பு செய்யப்பட வேண்டும். 30 நாட்களில் செலுத்தப்படாத நிலுவைத் தொகைக்கு 6% வட்டி வசூலிக்கப்பட வேண்டும். கேட்பு செய்து 90 நாட்களுக்குள் செலுத்தாத போது மனைக்கு வரன்முறை செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட வேண்டும்.

(x) ஏற்கனவே விற்கப்பட்ட மனைகளை வரன்முறை செய்யும் பொழுது கூராய்வு கட்டணமாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் உள்ளூர் திட்டக்குழும கணக்கில் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(xi) அனுமதியற்ற மனைப்பிரிவில் வரன்முறை செய்யப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சி ஒப்புதல் வழங்கும் பொழுது நிலஉரிமத்தினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(xii) வரன்முறை செய்யப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளின் அணுகுசாலைகளையும், மற்றும் மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு மனைக்குரிய அணுகுசாலை ஆகியவற்றின் உரிமைகளை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்-2 இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இந்த உத்தரவு மற்றும் மனைப்பிரிவு வரைபடம் பெற்றுக் கொண்டமைக்கு இவ்வலுவலகத்திற்கு உடன் ஒப்புகை சான்று வழங்க தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ).
மதுரை உள்ளூர்திட்டக்குழுமம்
மதுரை.

**இணைப்பு**
மனைப்பிரிவு வரைபடம் - 2 நகல்கள்

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate